## வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா (தனியார்) கம்பனி - 2019

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா (தனியார் கம்பனியின்) இன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்
- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011ம் ஆண்டு 3 ஆம் இலக்க காப்புறுதித்திருத்த சட்டத்திற்கமைய இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தை வேறுபடுத்தும் நோக்கத்திற்காக ரூபா 100 மில்லியன் வட்டியற்ற முற்ப்பணத்தை சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டிற்கு (SLIHL) மாற்றுவதற்கு 2014 ஒகஸ்ட் 08 ம் திகதி சபையால் 2014 ம் ஆண்டு 4 ஆம் இலக்க சுற்றிக்கை தீர்மானத்தின் பிரகாரம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டினால் (SLIHL) 31 ஆகஸ்ட் 2015 அல்லது அதற்கு முன்னர் காசாகவோ அல்லது பங்கு இலாபத்தினூடாகவோ | கருத்துரை இல்லை | கம்பனி முற்பணத்தை மீள அ உடனடி நடவடிக்கைகள் எடுக்கவேண்( |

மீளச்செலுத்தப்பட வேண்டும். சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டிணை (SLIHL) கூட்டிணைக்கும்போது தலா ஒரு சாதாரணபங்கை கொண்டுள்ள தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் ஆரம்பபங்காளர்களாக அடையாளப்படுத்தப்பட்டு இருந்தார்கள், ஏற்கனவே கூறப்பட்ட இரண்டு பங்குகளும் திறைசேறி செயலாளருக்கு சாத்தியமான வகையில் விரைவாக மாற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும் இதுவரையில் சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டினால் (SLIHL) முற்பணம் மீளசெலுத்தப்பட்டிருக்கவில்லை மற்றும் இங்கு முற்பண தீர்ப்பனவு தொடர்பாக கம்பனிக்கும் சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டிற்கும் (SLIHL) இடையில் உடன்படிக்கை இருந்திருக்கவில்லை. மேலும், கம்பனிப்பதிவாளரருடைய பதிவுகளின்படி சிறீலங்கா இன்வெஸ்மென்ட் கோல்டிங் லிமிடெட்டினது (SLIHL) மொத்த இரண்டு பங்குகளும் இதுவரை இரு தனிநபர்கள் சார்பாக திறைசேரி செயலாளருக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. ஆனால் நிறுவனத்திற்கு சொந்தமான அத்தகைய சொத்துகளை மற்றும் முற்பணத்தை மீட்டெடுப்பது கம்பனிக்கு சந்தேகமாக இருக்கிறது.

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை- நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | | | |
| (i) 5.2.1 வழிகாட்டல் | பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்கள் செயற்பாட்டு திட்டத்துடன் உள்ளடக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 ம் ஆண்டுக்கான | 2019 சனவரி 17 இல் கணக்காய்வுக்கு ஒப்படைக்கப்பட்ட பாதீட்டில் மூலதனப் பாதீடு உள்ளடக்கப்பட்டுள்ளது. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாட்டுத்திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) 9.2 வழிகாட்டல் | பொது முயற்சி திணைக்களம், பொது திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிலையுடன் பதிவு செய்யப்பட்ட அமைப்பு வரைபடத்தை கம்பனி கொண்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் அங்கீகரித்தலை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான செலவுகள் / பாதீட்டு ஒதுக்கீடு சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2019 சனவரி 17 இல் கம்பனியால் கட்டமைப்பின் பிரதி பொது முயற்சி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. 2019 செப்தெம்பர் 19 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கம்பனியின் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டது | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (iii) 9.3 வழிகாட்டல் | சபை மற்றும் அமைச்சு, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கம்பனி கொண்டிருக்கவில்லை. | செயற்பாட்டு முகாமைதிட்டத்தின் அடிப்படையில் அனைத்து உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுகள் வரிசை மேற்பார்வையாளர்கள் /தொழிற்பாட்டு தலைவர்களால் பரிந்துரைக்கப்பட்டு முகாமைத்துவ பணிப்பாளரினால் கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்டன. அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான செலவுகள் / பாதீட்டு ஒதுக்கீடு சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (iv) 9.7 வழிகாட்டல் | சம்பளங்களும் மற்றும் படிகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும் மற்றும் பொது திறைசேரி செயலாளரினுடைய அங்கீகாரமின்றி திருத்தங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும், கம்பனி இத் ஏற்பாடுகளுடன் இணங்கியிருந்திருக்கவில்லை. இதன் விளைவாக ஒரு மாத சம்பளப்பட்டியலில் மொத்த சம்பளமானது ரூபா 51,000 முதல் ரூபா 641,000 வரையான வீச்சுக்குள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது | அனைத்து உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படி திட்டங்கள் தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டது. அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ள மனிதவளத்திற்கான எந்தவொரு நடைமுறையும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் கம்பனியினுடைய அமைப்பு அகவிதியின் பிரகாரம், அனைத்து புதிய உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களுக்கான செலவுகள் / பாதீட்டு ஒதுக்கீடு சபையின் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் கம்பனியினுடைய ஆண்டுப்பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வருடாந்த கணக்கு ஏஜிஎம் இல் அங்கீகரிக்கப்பட்டன. கம்பனியால் 2019 செப்டெம்பர் 19 இல் முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு சம்பளக்கட்டமைப்பு மற்றும் வெற்றிட கட்டமைப்புகள் உள்ளடங்கிய விபரமான கடிதம் ஒன்று | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | அனுப்பப்பட்டிருந்நது, பதில் இன்னமும் கிடைப்பெறவில்லை. இது தற்போது கம்பனியால் 2020 மே 20 திகதியிடப்பட்டு கணக்காய்வுக்கு பிரதியிடப்பட்ட நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுப்ப்பட்ட கடிதத்தின் மூலம் பின்பற்றப்பட்டது. | |
| ஆ) 2015 யூன் 17 திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் பீஈடி 3/2015 | | | |
| (i) பிரிவு 2.2 | தலைவர் மற்றும் இயக்குனரகள் சபையின் படிகளை தீர்மானிப்பதற்கு முன் நிதி அமைச்சின் ஒப்புதலையும் மற்றும் வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரையினையும் பெற்றுள்ளதா என்பதனை உறுதிப்படுத்த கணக்காய்விற்கு சான்றுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | கடிதம் | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும் |
| (ii) பிரிவு 2.9 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு மாறாக தலைவருக்கு வழங்கப்பட்ட படிகளில் கம்பனி ஈபிஎவ் மற்றும் ஈரிஎவ் செலுத்தியது. | அவர் ஒரு நிறைவேற்று தலைவராகவும் நிரந்தர வெற்றிடமாகவும் காணப்பட்டதனால் இதனை இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இது ஏஜிஎம்மில் அங்கீகரிப்பட்டது. | கம்பனி வழிகாட்டலில் உள்ள ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,445,487,731 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,538,654,595. ஆகவே நிதி விளைவுகளில் ரூபா 93,166,864 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 2.2 விகிதப் பகுப்பாய்வு

சேகரிக்கப்பட்ட தகவலின் படி, 2019 ம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இலாபத்தன்மை விகிதங்கள் (சதவீதம்) | 2019 | 2018 |
|---|---|---|
| மொத்த இலாபம் (ஜீபீ) | 84.68 | 83.98 |
| தேறிய இலாபம் (என்பீ) | 70.02 | 75.53 |
| சொத்துமீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 11.87 | 13.38 |
| ஈடுபடுத்திய முதல் மீதான வருவாய் (ஆர்ஓசிஇ) | 14.81 | 15.82 |
| **திரவத்தன்மை விகிதங்கள் (தடவைகளின் எண்ணிக்கை)** | | |
| நடைமுறை விகிதம் | 14.34 | 5.10 |
| விரைவு விகிதம் | 14.32 | 5.09 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் முறையே 0.70 சதவீதம் மற்றும் 5.51 ஆல் அதிகரித்திருந்தது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சொத்து மீதான திரும்பல் மற்றும் ஈடுபடுத்திய முலதனம் மீதான திரும்பல் முறையே 1.51 சதவீதத்தால் மற்றும் 1.01 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனையால் எழுந்த நட்டம் வீழ்ச்சிக்கான காரணமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச்சொத்து விகிதம் மற்றும் திரவத்தன்மை விகிதம் 9.24 மற்றும் 9.23 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிறுதியில் செலுத்தவேண்டிய பங்குஇலாப தொகை தீர்த்ததன் காரணமாக நடைமுறைபொறுப்பு 65 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததே காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிரப்பி நிலையங்கள், குழாய்வழிகள் மற்றும் சேமிப்புத்தொட்டிகள் பாவித்தமைக்காக வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா லிமிடெட்டிடமிருந்து செயல்திறன் கட்டணமாக ஒரு மெட்ரிக்தொன்னுக்கு மொத்த பிரிவிற்கு 51 US டொலர் மற்றும் உள்நாட்டு பிரிவிற்கு 31 US டொலர் வசூலிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அடிப்படை பொருத்துதலுக்கான செயல்திறன் கட்டண வீதம் நிர்ணயித்தல் கணக்காய்விற்கு தெளிவாக இருக்கவில்லை. மேலும், வணிகத்தின் எந்தவொரு நிபந்தனைகளையும் மற்றும் விதிமுறைகளையும் நிர்ணயிப்பதால் கம்பனி தனி வாடிக்கையாளர் , எல்ஜிஎல் உடன் ஓர் ஒப்பந்தத்தை கொண்டிருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட லிற்றோ காஸ் லங்கா (முறையான செல்) உடன் ஒரு மெட்ரிக்தொன்னுக்கு 51 US டொலர் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டிருந்தது மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை ஒரு மெட்ரிக்தொன்னுக்கு 31 US டொலராக குறைத்தது அதற்கான விலை உடன்படிக்கை கிடைக்கின்றது | எல்ஜிஎல் உடனான இருக்கின்ற ஒப்பந்தத்தை கம்பனி புதுப்பிக்க வேண்டும். |